**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.648/2023**
**Prosecution Witnesses :9**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராதாமகேஷ், காவல் ஆய்வாளர் | Caste | : |
| Husband Name/ Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)
**(29.01.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கரிமேடு காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 2023ம் வருடம் திருமங்கலம் தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது 16.10.2022ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.லிங்கசாமி என்பவர் முதல் விசாரணை முடித்து எனது பார்வைக்கு வைத்த குற்ற எண்.232/2022 ச/பி.279, 337 இதச வழக்கை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு காயம்பட்டவர் இறந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 304(எ) இதசவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 26.10.2022ம் தேதி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் இருந்த போஸ் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் பிரேத விசாரணை

செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பிரேத பரிசோதனை முதல்நிலைக் காவலர் சௌந்திரராஜன் என்பவர் மூலம் மருத்துவருக்கு கடிதம் கொடுத்து அனுப்பினேன். பின்னர் 24.11.2022ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அருண்பாலன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்த திருமங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சம்பத்குமார் அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கினை முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.லிங்கசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 24.11.2022ம் தேதி சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதி 16.10.2022ம் இரவு 7.20 என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளருக்கு விபத்து வாகனத்தை அனுப்பியது 20.10.2022 என்றால் சரிதான். 4 நாட்கள் காலதாமதத்திற்கான காரணத்தை எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவயிடத்திற்கு வந்து ஸ்தல ஆய்வு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து கண்ணுற்ற சாட்சியாக அ.சா.1 மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்தயிடத்தில் 2 பக்கமும் பஸ் நிறுத்தம் மற்றும் வணிக வளாகங்கள், கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் விபத்து நடந்தயிடத்தில் கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடத்தில் சாலையின் நடுவில் உள்ள செண்டர் மீடியன் என்ற இடத்தில் செடியை தான் கோடாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த செடியானது ஆள் உயரம் உள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவயிட சாட்சிகளை

முறையாக விசாரிக்காமல் தவறாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.